0161

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

06.08.2018 / 0830 - 1030

බෞද්ධ ශිෂ්ටාචාරය I
பௌத்த நாகரிகம் I
Buddhist Civilization I

45 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**

※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
※ **1** தொடக்கம் **50** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (X) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** பிராமண வர்ணத்தினரைக் குறிப்பதற்கு 'த்விஜ' எனும் சொல் மரபு வழக்கமாயிருந்தது. பிராமணர்கள் இரண்டு முறை பிறக்கும் வணக்கத்திற்குரியவர்கள் என சமூகத்தில் உயர்ந்த நிலையைக் காட்டுவதற்கு இந்த 'த்விஜ' எனும் கொள்கை பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகின்றது. பிராமணர்கள் ஏற்றுக்கொள்வதன்படி முதலில் மகாபிரம்மாவின் வாயிலிருந்து பிறந்த பிராமணன் இரண்டாவது முறையாக பிறப்பெடுப்பது,
(1) ஜாத கர்மத்திலிருந்தாகும். (2) நாம கர்மத்திலிருந்தாகும்.
(3) சூடா கர்மத்திலிருந்தாகும் (4) உபநயன கர்மத்திலிருந்தாகும்.
(5) யாக கர்மத்திலிருந்தாகும்.

**2.** புத்தர் காலத்தில் இந்தியாவில் துறவு மரபுக்குரிய பல தத்துவரீதியான எண்ணக்கருக்களையும் சமயக் கொள்கைகளையும் புறக்கணித்த புத்தர் சில துறவிகளையும் பின்பற்றப்பட்ட பழக்க வழக்கங்களையும் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டதாகத் தெரிகின்றது. ஆயினும் பௌத்த துறவு மரபுக்கு தனித்துவமான சம்பிரதாயமாக இனங்காணத்தக்கது,
(1) வஸ்விஸீம (2) பிண்டபாத (3) அநாகரிக வாழ்க்கை
(4) உபோசத (5) உபசம்பதா

**3.** "கடன் பெற்றாயினும் உண்டு, குடித்து சுகத்தை அனுபவித்தல் வேண்டும்; மரணம் என்பது மோக்ஷம்; மரணத்தின் பின்னர் பிராணிகளின் இருப்பு இல்லை" என்பது சுகத்தைப் பெரிதாக மதிப்பவர்களின் சுகபோகவாதக் கருத்தாகும். இந்த இலட்சியவாதத்துக்கு மிகக் கிட்டிய சமய போதனையைக் கூறிய ஆசிரியர்,
(1) அஜிதகேஷகம்பல (2) பகுத கச்சாயன (3) பூரண கஸ்ஸப
(4) மக்கலீ கோசால (5) நிகண்டநாதபுத்த

**4.** வேதகாலத்திருந்தே இந்திய தத்துவ ஞானிகள் உயிரினம், உலகம் பற்றி ஆழமாக ஆராய்ந்தார்கள். துறவு மரபின் தோற்றத்துடன் இந்த நிலைமை மேலும் தீவிரமடைந்ததுடன், அதன் பயனாக பல்வேறுபட்ட தத்துவரீதியான வாதங்களை முன்வைக்க முனைந்தார்கள். இங்கு துறவு தத்துவஞானிகள் அறிமுகப்படுத்திய தத்துவமாக **கொள்ளப்படத்தக்கதல்லாதது**
(1) சாஸ்வத வாதம் (2) உச்சேத வாதம் (3) ஈஸ்வர நிர்மாண வாதம்
(4) நியதி வாதம் (5) அகிரிய வாதம்

[பக் 2 ஐப் பார்க்க

5. புத்தர் காலத்து இந்தியாவில் நடைமுறைப்படுத்தப்பட்ட பிராமணப் போதனைகளின்படி கீழே காட்டப்பட்டுள்ள கூற்றுகளுள் மிகச் சரியான கூற்றாவது,
   (1) "பெண்கள் கடும் துன்பத்திற்குள்ளாகியிருந்ததுடன் சதி பூஜை கட்டாயப்படுத்தப்பட்டிருந்தது." என்பதாகும்.
   (2) "பக்தியினை அடிப்படையாகக் கொண்ட கர்ம மார்க்கம் பிரமத்தை உணர்வதற்கான ஒரே வழி" என்பதாகும்."
   (3) "வேத நூல்கள் தேவ வாக்கியங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் கர்மப் பயன்கள் நிராகரிக்கப்பட்டன" என்பதாகும்.
   (4) "நால்வர்ணத்திற்கேற்ப சமூகத்தைப் பிரித்தலை ஏற்றுக் கொண்டதுடன் நபர் ஒருவரால் செய்யப்படும் செயலுக்கேற்ப அவரது உயர்வு, தாழ்வு தீர்மானமாகும்." என்பதாகும்.
   (5) ஸ்வதர்மத்தை ஏற்றுக் கொண்டதுடன் பிராமண, க்ஷத்திரிய ஆகிய இரண்டு வர்ணங்களுக்கும் ஏனைய வர்ணத்தினருக்குரிய எந்தவொரு செயலையும் செய்ய முடியும் என்பதாகும்.

6. பின்வரும் கூற்றுக்களில் நபரொருவரின் சக்தியையும் சுயாதீனத்தையும் உறுதிப்படுத்துவதில் மிகப்பொருத்தமான பௌத்த கூற்றாக இனங்காணக்கூடியது,
   (1) 'தன்னை மற்றவர்களுடன் ஒப்பிட்டு மற்றவர்களுக்கு துன்பம், தொல்லை செய்யாதிருத்தல் வேண்டும்' என்பதாகும்.
   (2) 'எல்லாப் பிராணிகளும் தண்டனைக்குப் பயந்தவை'என்பதாகும்.
   (3) 'தனக்கு உதவி தானேதான். மற்றவர்களின் உதவி எங்கிருந்து? என்பதாகும்.
   (4) 'நோயற்றவர்களாயிருப்பது பெரும் பேறாகும்.'என்பதாகும்.
   (5) 'புண்ணியம் ஆற்றும் பக்திமிக்க இல்லறத்தானை கடவுளும் (சக்ரயா) வணங்கும்; என்பதாகும்.

7. இராச்சியத் தோற்றம் பற்றிய பௌத்த மனப்பாங்கை வெளிப்படுத்தும் தீகநிகாயாவின் அங்கஜ்ஜா சூத்திரத்திலுள்ள போதனைகளில் **கருதப்படத்தகாத** கூற்றாவது,
   (1) 'வரி செலுத்துதல் மக்களின் கடமையாகும்.'
   (2) 'ஆட்சியாளரிடமுள்ள அதிகாரம் மக்களால் வழங்கப்பட்டதாகும்.'
   (3) 'தவறு செய்தவனுக்குத் தண்டனையளித்தல் அரசனின் பொறுப்பாகும்.'
   (4) 'மக்களிடம் வரி பெறும் அதிகாரம் அரசனுக்கு உண்டு.'
   (5) 'அரசனுக்கு புத்திமதி கூறுதல் பிராமண வர்ணத்தவரின் பொறுப்பாகும்.'

8. பின்வரும் கூற்றுகளுள் தச ராஜதர்ம (பத்து ராஜதர்மங்கள்) த்திற்கு **உரித்தற்ற** விடயமொன்றினைக் கொண்டுள்ள கூற்று யாது?
   (1) "தானம், சீலம், புலமை, மென்மை, நேர்மை"
   (2) "சகிப்பு, அகிம்சை, குரோதமற்ற நிலை, துறவற இயல்பு, நன்கொடை
   (3) "தானம் , துறவற இயல்பு, குரோதமற்ற நிலை, அகிம்சை, நன்கொடை
   (4) "துறவற இயல்பு, சீலம், சகிப்பு, எதிர்ப்பற்ற நிலை, குரோதமற்ற நிலை
   (5) "குரோதமற்ற நிலை, அகிம்சை, நன்கொடை, எதிர்ப்பற்றநிலை, தானம்

9. தச சக்விதிவத் (சக்கரவர்த்தியின் 10 குணங்கள்) பற்றிய பௌத்த போதனைக்கேற்ப சக்வித்தி அரசன் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறையைக் **கொண்டிராதது,**
   (1) "அந்தப்புரத்திலிருப்பவர்களுக்கு பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்." என்பதாகும்
   (2) "படையினருக்கு பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்"என்பதாகும்.
   (3) "பிராமண கிருகஸ்தர்களுக்குப் பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்."என்பதாகும்.
   (4) "மணமான, மணமாகாத பெண்களுக்கு பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்."என்பதாகும்.
   (5) "துறவுபூண்ட பிராமணர்களுக்கு பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்."என்பதாகும்.

10. சிகாலோவாத சூத்திரத்தின்படி வடக்குத் திசையிலிருந்து பிரதிநிதித்துவப்படுத்துவது,
   (1) ஆசிரியர்கள் (2) கணவன், மனைவி (3) நண்பர்கள்
   (4) சேவகர்கள் (5) சந்நியாசிப் பிராமணர்கள்

11. வண்டியின் சக்கரத்திற்கு அச்சாணி போன்று சமூக அபிவிருத்திக்கு ஏதுவாகும் சமயக் கருத்துக்கள் நான்கு சிகாலோவாத சூத்திரத்தில் வரும் தர்மத்துள் அடங்குகின்றன. அந்த விடயங்கள் உள்ளிட்ட சமயக் கொள்கைகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?
   (1) சத்தர சங்கிரக வஸ்து (2) சத்தர பிரஹ்ம விகரண (3) சத்தர கர்ம க்லேஷ
   (4) சத்தர மஹாபதேஷ (5) சத்தர அகதி

[பக் 3 ஐப் பார்க்க

**12.** குற்றங்கள் அதிகரித்தல் சமூகமொன்று பௌதீக, ஆன்மீக ரீதியான சீரழிவுக்கு உள்ளாவதில் தாக்கம் செலுத்தும் பிரதான காரணியாகும். சமூகத்தில் குற்றங்களானவை தானாக ஏற்படுவதில்லையாயினும் பல்வேறு காரணங்களினால் அவ்வப்போது உண்டாவதென கூட்டதந்த முதலான சூத்திரங்கள் தெளிவாக விளக்குகின்றன. இந்தக் குற்றங்களைத் தடுத்தல் (ஒழித்தல்) நாட்டின் அபிவிருத்திக்கு மிக அவசியமானதொன்று என இனங்காணும் புத்தசமயம் தஸஸக்விதிவத்திலும் அதுபற்றி எடுத்துக் கூறுகின்றது. குற்றங்கள் ஏற்படுவதையும் அவற்றின் அதிகரிப்பினையும் தடுக்கும் பௌத்த நியாயத்தின்படி குற்றத்தை தடுப்பதற்கு மிகச் சிறந்த வழியாக இனங்காணப்படத்தக்கது,

(1) நீதிக்குக் கட்டுப்படுவதன் அவசியத்தை எடுத்துக் காட்டல்
(2) மனிதனைக் குற்றம் புரியத் தூண்டும் காரணங்களை ஒழித்தல்
(3) பாதுகாப்பு நடவடிக்கைளை பலப்படுத்துதல்
(4) குற்றம் புரிபவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுத்தல்
(5) குற்றங்களை மன்னித்து, குற்றம் புரிபவர்களுக்கு புனர்வாழ்வு அளித்தல்

**13.** ஒருவர் புரியும் அறிவீனமான செயல்களால் அவர் பொருளாதார அழிவிற்கு உள்ளாகும் வகையினை புத்தசமயம் எடுத்துக் கூறுகின்றது. சிகாலோவாத சூத்திரத்தில் 'போகிகளின் நரகத்திற்கான வழி' என்பதன் மூலம் காட்டுவது இப்படியான ஆறு விடயங்களையே. இந்த ஆறு வகையான போக அழிவிற்குக் காரணமொன்று **அல்லாத** விடயமாவது,

(1) மது
(2) சூது
(3) தீய நண்பர் சகவாசம்
(4) பெண் வசப்படல்
(5) சோம்பல்

**14.** "சுவாமி, பாக்கியவானே, எனது வாலிபப் பருவத்தில் இருந்த நான் வாலிபப் பருவத்திலிருந்த நகுலமாதாவை மணம் முடித்தேன். அக் காலத்திலிருந்து நான் வேறு ஒரு பெண்ணை மனத்தினாற் கூட விரும்பவில்லை. ஆகவே அவளை விடுத்து வேறொரு பெண்ணிடம் சென்றேன் என்று ஏன் கூறுகின்றார்கள்?. 'பாக்கியவானே, நாமிருவரும் இவ்வுலகில் மட்டுமன்றி மறு உலக வாழ்விலும் கூட ஒன்றாகவே வாழ விரும்புகின்றோம்.' என நகுலபிதா பாக்கியவானின் முன்னிலையில் கூறினார். அவ்வாறே நகுலமாதாவும் கூறினார். இதன்படி நகுலபிதா, நகுலமாதா ஆகிய இருவரும்,

(1) மனத்தாலும் உடலாலும் பாவச் செயல்களில் ஈடுபடவில்லை.
(2) 'தச அகுசல' எனப்படும் பத்து பாவச் செயல்களினின்றும் விலகிச் செயற்பட்டனர்.
(3) 'பன்சில்' எனப்படும் ஐந்து சீலங்களையும் மீறாது அதனை பாதுகாத்துள்ளனர்.
(4) பெண்களும் ஆண்களும் காமம் காரணமாக தீயவற்றைச் செய்யாதிருந்தனர்.
(5) தவறான பாலியல் நடவடிக்கைகளிலிருந்து விலகி நடந்தார்கள்.

**15.** கடும் உலோபத்தனம் நிர்வாண மார்க்கத்திற்குத் தடையானது என இனங் காணும் பௌத்தன் மற்றவர்களின் பொருட்களில் ஆசைகொள்ளாது தனது செல்வத்தை, தானம் முதலிய செயல்களில் ஈடுபடுத்துவதற்கும் தியாக மனப்பாங்குடன் செயற்படவும் தொடங்குகிறான். அவ்வாறே கோபம், பகைமை, கொலை, பழிவாங்கல் முதலிய 'வ்யாபாத' பெயரால் அடையாளப்படுத்தப்படும் கோப எண்ணங்களை உருவாக்கிக் கொள்வது தனக்கே நல்லதல்லாதனவற்றுக்கும் துக்கத்திற்கும் காரணமாவன என்பதை அறிந்து பொறுமையுடனும் அன்புடைமையுடனும் செயற்பட முயற்சிக்கிறான். பொய்யான நம்பிக்கை, மூட நம்பிக்கை முதலான தவறான கருத்துக்களைக் கொண்டிராத அவன் இகலோகத்திலும் பரலோகத்திலும் வெற்றியுடன் 'நிப்பான' அடையும் வழி ஒன்றையே தனது குறிக்கோளாகக் கொண்டு வாழ்கிறான். மேலுள்ள பந்தியில் காட்டப்படும் பௌத்த நல்லொழுக்க (சதாசார) மார்க்கத்திற்கு இடையூறு விளைவிக்கும் கெட்ட (அகுசல) செயல்களைக் கொண்ட போதனைகளை எவ்வாறு கூறுவர்?

(1) பஞ்ச நீவரண
(2) தஸ அகுசல் கம்ம
(3) மூன்றுவகை அகுசல மூல (கெட்டவற்றிற்கான மூலங்கள்)
(4) நான்கு கர்மக்லேஷ
(5) தசவஸ்துக மித்யா த்ருஷ்டி

[பக் 4 ஐப் பார்க்க

**16.** "சுபோத" கனிஷ்ட வித்தியாலயத்தின் பொன்விழாவிற்காக நடத்தப்பட்ட முழு இரவு 'பரித்திராண தம்ம' போதனைக்காக மகாசங்க அங்கத்தவர்கள் வித்தியாலய பாண்ட் வாத்தியக் குழுவினரால் மரியாதையுடன் அழைத்துச் செல்லப்பட்டனர். பாடசாலை மாணவ, மாணவியர் தேரர்களின் காலைக் கழுவுதல், நீராகாரம் வழங்குதல் முதலானவற்றின் மூலம் வணங்கி வரவேற்க வித்தியாலய அதிபர் வெற்றிலைப் பெட்டியை வழங்கி, வணங்கி அவர்களை பிரித் போதனைக்காக வரவேற்றார். பஞ்சசீலத்தை மேற்கொண்டபின்னர் பிரித்தின் நன்மைகள் பற்றிய பெறுமதியானதொரு போதனை அங்கு நடாத்தப்பட்டது. அத்துடன் கர்மத்தின் விளைவுகள் பற்றிய விழிப்புணர்ச்சி, நம்பிக்கை பற்றியும் கூறப்பட்டது. எல்லோரும் "பிரித்" ஓதுதலைச் செவிமடுத்தனர். அடுத்த நாள், விசுவாசத்துடன் உணவு தானம் வழங்கப்பட்ட பின்னர் பாடசாலையின் அபிவிருத்திக்காகப் பாடுபட்டுழைத்த மறைந்து போன ஸ்தாபகர்கள், உள்ளிட்ட அனைவருக்கும் வித்தியாலய அதிபர் உள்ளிட்ட சகலருக்கும் நன்றி கூறி எல்லோரையும் மகிழ்வித்து 'பிங்கம' வை நிறைவு செய்தனர். மேலுள்ள 'பிங்கம' செய்யும்போது புத்த சமயம் போதிக்கும் 'தஸ புண்ய' செயற்பாடுகளுள் பாடசாலை மாணவ, மாணவியருக்கு முழுமைப்படுத்திக்கொள்ள முடியாத புண்ணிய செயல்கள் (புண்யகிரியா) என இனங்காணக் கூடியது.

(1) பாவனா (2) பத்திதான (3) பத்தானுமோதனா
(4) சீல (5) த்ருஷ்டி ருஜுகரண

**17.** "ஆதிபதெய்யதம்ம" என்றழைக்கப்படுவது 'தம்மத்தை ஆளுதல்' என்பதனையாகும். அதிபத்தி தர்மத்தின் பயன்பாடு பற்றி புத்தசமயம் வலியுறுத்துவது,

(1) புண்ணிய, பாவங்களின் நன்மை, தீமைகளை இனங்காணுதல்.
(2) ஆராம நிர்வாகத்தின் தலைமைத்துவத்தை இனங்காணல்.
(3) தர்மத்தின் சரி, பிழைகளை ஆராய்தல்.
(4) குசல், அகுசல் (நல்ல, கெட்ட) என்பவற்றை ஆராய்தல்.
(5) விநய நீதிகளின் பொருந்துகை, பொருந்தாமையை ஆராய்தல்.

**18.** 'ஆகாரவதீ சிரத்தா' வின் விசேட லட்சணமொன்றாவது,

(1) மும்மணிகளை மதித்தல்
(2) மும்மணிகளை மிதமிஞ்சிய மகிழ்வுடைமையும் பிரகாசிக்கும் நம்பிக்கையுடைமை
(3) பக்தியுடன் மும்மணிகளை மதித்தல்
(4) ஆன்மீக மகிழ்வுடன் மும்மணிகளை மதித்தல்
(5) ஆராய்ந்து பார்த்து பகுத்தாய்வுடன் மும்மணிகளை மதித்தல்.

**19.** 'சரத பிக்கவெ சாரிகங் பஹுஜன ஹிதாய பஹுஜன ஸுகாய லோகானுகம்பாய அத்தாய ஹிதாய ஸுகாய தேவமனுஸ்ஸானங், மா ஏகென த்வெ அகமித்த' என்பதான போதனை முதலாவதாக சமய தூதுக் குழுவினரை சேவைக்காக அனுப்பும்போது போதித்த பிரசித்தமான போதனை என மகாவக்க பாளியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கூற்றில் முகாமைத்துவம் பற்றிய அடிப்படையான பௌத்த போதனை உள்ளடங்கியுள்ளது. அதன்படி இக்கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுவதாவது,

(1) கால முகாமைத்துவம்
(2) குழு முகாமைத்துவம்
(3) ஆன்மீக முகாமைத்துவம்
(4) பௌதிக, வள முகாமைத்துவம்
(5) சூழல் முகாமைத்துவம்

**20.** கிருஹஸ்த (இல்லற) வாழ்வில் பொருளாதார சௌபாக்கியத்திற்காக வியாபாரம் அல்லது வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுவதனை புத்தசமயம் தர்மவழி ஜீவனோபாயம் என்று அனுமதித்துள்ளது. அத்துடன் செய்யத்தகாத வியாபாரங்கள் பற்றியும் புத்தசமயம் வலியுறுத்தியுள்ளது. அவ்வாறு செய்யத்தகாத ஐந்து வியாபாரங்கள் பற்றியும் புத்தமயம் வலியுறுத்தியுள்ளது. அவ்வாறு செய்யத்தகாத ஐந்து வியாபாரங்கள் பற்றி வணிஜ்ஜா சூத்திரத்தில் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அங்கு காட்டப்படும் ஸத்த வணிஜ்ஜா மற்றும் சத்தவணிஜ்ஜ என்பது குறிப்பது

(1) ஆயுதங்களினதும் கால்நடைகளினதும் வியாபாரம்
(2) மாமிச வியாபாரமும் கால்நடை வியாபாரமும்
(3) ஆயுத வியாபாரமும் மாமிச வியாபாரமும்
(4) கால்நடை வியாபாரமும் மதுபான பொருட்கள் வியாபாரமும்
(5) ஆயுத வியாபாரமும் நச்சுப் பொருள் வியாபாரமும்.

[பக் 5 ஐப் பார்க்க

**21.** புத்தரும் அவ்வாறே அவரது சீடர்களும் இயற்கை அழகு மற்றும் அழகியல் சார் அழகுகளையும் மதித்த சந்தர்ப்பங்கள் திரிபிடக இலக்கியங்களில் உள்ளடங்கியுள்ளன. இருப்பினும் 'நச்சகீதவாதஜக விஸூகதஸ்ஸன மாலா கண்ட விலேபனதாரண மண்டன விபூஸனட்டான வேரமணி ஸிக்கா பதங் ஸமாதியாமி' எனும் சமயக் கட்டளைகள் இராகத்துடனான அழகியல் இரசனை தவிர்க்கப்பட வேண்டியதென சீலம் பற்றிய புத்தசமயப் போதனைகள் தெளிவுபடுத்துகின்றன. இச்சமயக் கட்டளைகள் இராகத்துடன் அழகியல் இரசனை செய்வது பொருத்தமற்றதென போதனை செய்யப்பட்டுள்ளது,

(1) நான்கு பேரைக் கொண்ட குழுவினருக்கு (2) உபாஸக, உபாஸிகைகளுக்கு
(3) உபோஸதவைக் கடைப்பிடிப்பவர்களுக்கு (4) எல்லாப் பௌத்தர்களுக்கும்
(5) பாவனாவில் (தியானத்தில்) ஈடுபட்டிருப்போருக்கு

**22.** பௌத்த துறவிகளது சமூக விஸ்தரிப்புடன் பலவித நோக்கங்களுடன் கூடியவர்கள் புத்தசாசனத்திற்குள் வந்துவிட்டனர். அவர்களுள் இலாபத்தை முன்னிட்டும் மரியாதை பெறுவதை முன்னிட்டும் மாறுபட்ட கருத்துக்கள் கொண்ட, வேறு நம்பிக்கைகள் கொண்ட துறவிகளும் அடங்குவர். இவ்வாறு சாசனத்துக்குட்பட்ட வேறு துறவிகளின் செயற்பாடுகள் பௌத்த சங்க சமூகத்தின் நிலைப்பாட்டிற்குத் தீமை பயப்பனவாயின. இதனால் வேறு நம்பிக்கைகளிலிருந்து வந்து உபசம்பதாவை ஏற்க எதிர்பார்க்கும் துறவிகள் நான்கு மாதங்களைப் பயிற்சிக்காலமாகக் (நன்னடத்தையை சோதிக்கும் கால) கழிக்க வேண்டுமென புத்தர் நிபந்தனையொன்றை விதித்தார். இருப்பினும் இந்தச் சோதனைக் காலம் பற்றிய நியமத்திலிருந்து சாக்கிய வம்சத்தினர் விடுவிக்கப்பட்டனர். இதற்குக் காரணமாவது,

(1) சாக்கிய வம்சத்தினர் தவறு செய்யாமை
(2) சாக்கிய வம்சத்தினர் சாசனத்திற்குட்படுவதற்கு பெரும் அக்கறை காட்டியமை
(3) சாக்கியர்கள் சோதனை (பயிற்சி)க் காலத்தை விரும்பாமை
(4) சாக்கியர்களுக்கு புத்தர் விஷேஷ சலுகை கொடுக்க வேண்டிய தேவையேற்பட்டமை
(5) சாக்கிய வம்சத்தவர்களை நிர்வகிப்பது இலகுவாயிருந்தமை

**23.** புத்தரின் மூவகை ஞானத்திற்குரியதாவது,

(1) புப்பேநிவாஸானுஸதி ஞானம், பரசித்த விஜானன ஞானம், ஆஸவக்க ஞானம்
(2) புப்பேநிவாஸானுஸதி ஞானம், திப்பசக்கு ஞானம், ஆஸவக்க ஞானம்
(3) புப்பேநிவாஸானுஸதி ஞானம், திப்பஸொத்த ஞானம், ஆஸவக்க ஞானம்
(4) புப்பேநிவாஸானுஸதி ஞானம், மனோமய இத்தி ஞானம், ஆஸவக்க ஞானம்
(5) புப்பேநிவாஸானுஸதி ஞானம், திப்பசக்கு ஞானம், திப்பஸொத்த ஞானம்

**24.** சமயப் பொறுமையென்பது புத்த குணங்களுள் பிரசித்தமானதொரு விஷேஷ பண்பு எனக் கொள்ளக்கூடியது. புத்தர் மற்றைய சமயத்தவர்களுடன் மிகவும் நட்புடன் செயற்பட்டார் என நிரூபிக்கும் ஆதாரங்கள் திரிபிடகத்தில் கிடைக்கின்றன. புத்த குணங்களுள் அடங்கும் இந்த விசேட இயல்பினை நிரூபிக்கும் மிகவும் பொருத்தமான நிகழ்வாகவுள்ளது,

(1) மூன்று ஜடிலர்களை துறவுநிலைப்படுத்தியமை
(2) சோணதண்ட பிராமணர் புத்தரைக் காணச் செல்லுதல்
(3) சஜ்ஜய பிரிவஜியாவினைப் பின்பற்றியவர்களை புத்த சாசனத்தில் துறவிகளாக்கியமை
(4) ஸகுலுதாயீ பிரிவஜியவின் ஆராமாவிற்குச் சென்று அவருடன் கலந்துரையாடியமை
(5) இல்வாழ்வானான உபாலியை தனது ஆசார்யரான நிகண்டநாத புத்தரிடம் செல்லுமாறு அறிவுறுத்தியமை

**25.** க்லேஷங்களினால் மாசுபடுத்தப்பட்ட சமூகத்தில் மாசின்றி வாழ்தலும் தூய்மையாக வாழ்தலும் புத்த இயல்புகளுள் சீரியதொரு இயல்பாக மூலாதாரங்களில் காட்டப்பட்டுள்ளன. இந்த விஷேஷமான பண்பினைச் சுட்டுவதற்கு மிகப் பொருத்தமான கூற்றாவது,

(1) பறவையைப் போன்று இலகு இதயத்துடன் வாழ்தல்
(2) புராணங்களில் வரும் ஒற்றைக் கொம்பு குதிரை போல் தனித்து இருத்தல்
(3) தாதீ குணங்களுடன் செயற்படல்
(4) விராகீசரண
(5) தாமரை போன்ற வாழ்க்கை

**26.** 'இங்கே வா, என்னுடைய இந்த சாசனத்தில் பிரஹ்மசரியத்தில் இரு' எனும் இந்த புத்தரின் கூற்றுக்கமைவான முழுமையடையும் 'உபசம்பதா' துறவு முறை எவ்வாறு அழைக்கப்படும்?

(1) பஞ்சஹவ்யாகரண உபசம்பதா (2) சரணாகமன உபசம்பதா
(3) ஏஹிபிக்கு உபசம்பதா (4) அட்டவாசிக உபசம்பதா
(5) ஞத்திசதுத்தகம்ம உபசம்பதா

[பக் 6 ஐப் பார்க்க

**27.** "ஸத்தாஹுகரண" என்பதனால் குறிக்கப்படுவது,
(1) தியானம் (பாவனா) பற்றிய தர்ம உபதேசம்
(2) போயா கம்மவிற்கான நியதி
(3) மழைக்கால வாசம் பற்றிய வினய விதி
(4) மழைக்கால வாச முடிவு பற்றிய வினய விதி
(5) மழைக்கால வாச இடத்தை விட்டுச் செல்லல் பற்றிய விதிமுறை

**28.** புத்த சாஸனத்தில் முதன்முதலாக மும்மணிகளைச் சரண்புகுந்த உபாஸகர்,
(1) பெனாறிஸ் செட்டி (கோடீஸ்வரன்) (2) அனெபிண்டு செட்டி (3) யஸகுல புத்திரன்
(4) பிம்பிசார மன்னன் (5) கோஷித செட்டி

**29.** ஒரே நாளில் தனது கணவரதும் இரண்டு புத்திரர்களினதும் தாய், தந்தையரதும் சகோதரரதும் மறைவினால் கதியற்று நின்ற படாசாரா என்பவர் புத்தரின் பெருங்கருணையினால் சாந்தியடைந்து சாசனத்தில் பிக்குணி சமூக முதன்மையையும் கூட பெற்றதாக மூலாதாரங்கள் தெரிவிக்கின்றன. அதற்கிணங்க படாசாரா முதன்மைப் பதவியில் இருந்தது,
(1) தர்மதர பிக்குணிகளின் மத்தியில்
(2) துதாங்கதர பிக்குணிகளின் மத்தியில்
(3) வினயதர பிக்குணிகளின் மத்தியில்
(4) தர்மகதிக பிக்குணிகளின் மத்தியில்
(5) சிரராத்ரஞ பிக்குணிகளின் மத்தியில்

**30.** பிக்கு, பிக்குணிகளுக்காக புத்தர் இட்ட எந்தவொரு விதிகளையும் மாற்றலாகாது எனவும் அவரால் இடப்படாத எந்தவொரு விதியையும் ஏற்படுத்தக் கூடாதெனவும் முதலாவது பௌத்த மகாசபைத் தேரர்கள் தீர்மானித்தார்கள். ஏனெனில்
(1) வண. ஆனந்த புத்தரின் புத்தானு புத்த சிக்ஷா பதத்தில் என்ன கூறப்பட்டுள்ளதென்பதை ஆராயாமல் இருந்தமையால்
(2) பொதுமக்கள் எதிர்ப்பை உண்டாக்கக்கூடும் என்பதை உணர்ந்த மகாகாஷ்யப மகா அரஹத் அதற்கான தனது விருப்பமின்மையை வெளிப்படுத்தியமை
(3) விநய, சாஸனத்தின் தொடர்ச்சியென்பதால் விநய விதியை மாற்றுவது சாஸன அழிவிற்குக் காரணமாக அமையும் எனக் கருதியதால்
(4) எந்தவிதி மாற்றப்பட வேண்டும் எனத் தீர்மானிக்க முடியாமையினால்
(5) பிறப்பிக்கப்பட்ட சகல விநய விதிகளும் பிக்குகளுக்கு அவசியம் எனக் கருதப்பட்டமையால்

**31.** வஜ்ஜீபுத்தக பிக்குகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுப் பின்பற்றப்பட்டு வந்துள்ள தஸவஸ்துவில் காட்டப்படும் அதஸகனிஸீதனகப்ப என்பது,
(1) ஒரே எல்லைக்குள் அமைந்துள்ள சிறு சிறு இருப்பிடங்களில் வேறு வேறாக இருந்துகொண்டு பொஹொஸ செய்தல் நல்லது.
(2) ஆராய்வின்றி பரம்பரையாக வந்த விடயத்தை ஏற்றுக்கொள்ளல் நல்லது.
(3) எரியாத படுக்கை விரிப்புகளை ஏற்றுக் கொள்ளல் நல்லது.
(4) ஒரு எல்லையுள் வாழும் பிக்குகளின் விருப்பத்தை எடுத்துக் கொள்ளாமல் வேறு வேறாக பொகொஸ அனுஷ்டித்த பின்னர் விருப்பத்தைக் கேட்டறிதல் நல்லது.
(5) ஒரு முறை தானம் பெற்றபின் வேறு ஒரு கிராமத்திற்குச் சென்று அதிலிருந்து மீண்டும் தானம் பெறுதல் நல்லது.

**32.** தர்மாசோகனின் ஆட்சிக் காலத்தில் பிக்குகள் பல வருட காலங்கள் போயகம்மா செய்யாதிருந்தார்கள் என மூலாதாரங்களின் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவ்வாறு செய்யாமைக்கான காரணமாகத் தெரிவிக்கப்படுவது,
(1) பொகொஸவுக்கு அளவு இல்லாமை
(2) அரச ஆதரவு கிடைக்காமை
(3) உயரிய சாசன பிக்குகள் இல்லாமை
(4) துர்நடத்தையுள்ள பிக்குகள் அதிகரித்திருந்தமை
(5) மற்றைய சமய நம்பிக்கையாளர்களின் பயமுறுத்துகை அதிகரித்தமை.

**33.** பழைமையான இந்திய பல்கலைக்கழகமொன்றின் புகழ்வாய்ந்த அறிஞரான வண.சாந்த ரகஷிததேரர் என்பவர் முதன்மையான மகாயான பண்டிதராவார். அவர் ஆசிரியராகச் சேவை புரிந்தது,
(1) நாலந்த பல்கலைக்கழகத்தில் (2) விக்ரமசிலா பல்கலைக்கழகத்தில்
(3) ஓதந்தபுரி பல்கலைக்கழகத்தில் (4) வலஹி பல்கலைக்கழகத்தில்
(5) ஜகத்தலா பல்கலைக்கழகத்தில்

[பக் 7 ஐப் பார்க்க

**34.** மூன்றாவது பௌத்த மகாசபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க பாரதத்திற்கும் அதற்கு வெளியேயுள்ள ஒன்பது நாடுகளுக்கும் மத தூதுக் குழுக்கள் அனுப்பப்பட்டன. இந்த வேலை ஒழுங்கிற்கமைவாக வண. மகாதேவ பணிபுரியக் கிடைத்தது,

(1) மஹிஸ மண்டலத்திற்கு
(2) ஹிமவந்த தேசத்திற்கு
(3) யோனக தேசத்திற்கு
(4) வன வாஸ தேசத்திற்கு
(5) அபரந்த தேசத்திற்கு

**35.** புத்த சாசனத்திற்குப் பெருந் தொண்டாற்றிய கனிஷ்க மன்னன் புத்த மகாசபையொன்றிற்காக எதற்காக ஆதரவு காட்டினாரெனின்,

(1) துர் நடத்தையுள்ள பிக்குகளை சாசனத்திலிருந்து விலக்க வேண்டிய தேவை ஏற்பட்டமை
(2) பௌத்த மகாசபையொன்று கூட்டப்படுவதன் அவசியத்தை பிக்குகள் அவருக்கு எடுத்துக் காட்டியமை
(3) அசோக மன்னன் ஆற்றியது போன்ற பெரும் தொண்டினைத் தானும் செய்ய வேண்டுமெனக் கருதியமை
(4) இடையன் வேடத்தில் வந்த தெய்வமொன்று எதிர்காலத்தில் கனிஷ்க எனும் பெயருடைய மன்னன் ஒருவன் காலத்தில் பௌத்த மகாசபை கூடும் என்று புத்தரால் போதனை செய்யப்பட்டுள்ளதெனக் கூறப்பட்டமை,
(5) பௌத்த மகாசபையைக் கூட்டுதல் பௌத்த மன்னனின் அவசியமானதொரு கடமை எனும் ஒரு மரபு இருந்தமை,

**36.** அரச நிர்வாகம் பற்றிய பௌத்தக் கொள்கையின்படி தனது நிர்வாக ஆளுகை நன்கு அமைய வேண்டும் என்பதற்காக முயன்றவரான ஸ்ரீசங்கபோதி மன்னன்,

(1) பஞ்ச சீலத்தைப் பின்பற்றி ஆட்சி புரிந்தபோதிலும் களவு செய்தவர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்படுமென பகிரங்கமாக அறிவித்தார்.
(2) நான்கு போயா தினங்களிலும் நிலத்தில் வாழும் கால்நடைகளினதும் நீர்வாழ் பிராணிகளதும் உயிர்களைக் காப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்.
(3) மது அருந்துதல் எந்தவொரு செயற்பாட்டிற்கும் பொருந்தாது எனக் கூறினார்.
(4) 'மாகாத' சட்டத்தை ஏற்படுத்தினார்.
(5) பொய்யான வழக்குகள் பதிவு செய்வோரை சிறையிலிட்டார்.

**37.** இலங்கை சாசன வரலாற்றில் பெரும் முரண்பாடுகளை ஏற்படுத்தியதனால் புதிய சீர்திருத்தக் கருத்துக்களை அறிமுகம் செய்த நிறுவனம் என்ற வகையில் அபயகிரி விகாரையை இனங்காண முடியும். மகாயான புத்த மதத்தை இலங்கையில் பரப்புவதற்கு உதவிய அபயகிரி, மகாவிகாரைக்குரிய சில ஸ்தாபனங்களையும் அவற்றின் சொத்துக்களையும் தன் வசமாக்கியதாக சமய வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. அவ்வாறான ஒரு நிகழ்வாக எடுத்துக் காட்டத்தக்கது.

(1) மகாகால சிலா சிலையைத் தன்வசமாக்கியமை
(2) தொலுவில சிலையை தன்வசமாக்கியமை
(3) தூபாராமவைத் தன் வசப்படுத்தியமை
(4) வெஸ்ஸகிரியைத் தன் வசப்படுத்தியமை
(5) தந்ததாதுவை தனது பொறுப்பிற்குக் கொண்டு வந்தமை

**38.** பௌத்தத்திற்கு முற்பட்ட கால இலங்கையில் தெய்வ சம்பந்தமான நம்பிக்கைகள், யகஷ வழிபாடு, வேறு பலவித சமய நம்பிக்கைகள் நிலவின என்பதை மகாவம்சத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. நகரத்தின் மேற்கு வாயிலின் அருகே ஆலமரம் அமைந்திருந்தமை ஒரு தெய்வத்தின் வழிபாட்டிற்காகவாகும். மகாயானப் போதனையின்படியும் தெய்வநிலைக்குக் கொண்டுவரப்பட்ட அது,

(1) கம்மார தெய்வம்
(2) வ்யாத தெய்வம்
(3) வைச்ரவண தெய்வம்
(4) விபீஷண தெய்வம்
(5) திருதராஷ்ட்ர தெய்வம்

**39.** தேரவாத பௌத்த மரபு நல்ல நிலைபேற்றையடைந்தது கி.பி 5 ஆம் நூற்றாண்டில் 'ஹெல அடுவா' நூலைப் பாளிக்கு மொழிபெயர்ப்பதற்கு வெளி நாடுகளிலிருந்து வந்த பிக்கு அறிஞர்களினது செயற்பாடுளினாலாகும். அவ்வாறு வந்த பிக்குகளுள் வண. புத்கோஸ சிறப்பானவர். வண. புத்தகோஷரின் சமகாலத்தவரும் இந்தியாவிலிருந்து வந்தவருமான பிக்குவாக இனங்காணப்படுபவர்.

(1) வண. சங்கமித்ர
(2) வண புத்ததத்த
(3) வண. மஹாதிஸ்ஸ
(4) வண மஹாநாம
(5) வண. உபஸேன

[பக் 8 ஐப் பார்க்க

**40.** பர்மாவில் புத்தசமயம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர், அந்நாட்டு வாசிகளின் பிரதானமான சமய நம்பிக்கையாக இருந்தது 'நாத்' வழிபாடாகும். புத்தசமயம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரும் பர்மிய வாசிகள் முற்றாக 'நாத்' வழிபாட்டை முற்றாகக் கைவிடவில்லை என்பதற்கு ஆதாரங்களுள்ளன. புத்தசமயத்தை பர்மாவின் அரச மதமாக்கிய அனவரத மன்னன், ஸ்வேதகொன் தாதுகோபத்தினைச் சுற்றி முப்பத்தாறு நாத் பூத சிலைகளை அமைத்தமை இதற்குச் சிறந்த உதாரணமாகக் காட்டப்படலாம். அரசன் அத்தகைய செயற்பாட்டைச் செய்ததன் மூலம் எதிர்பார்த்தது.

(1) 'நாத்' பூதம் பற்றி அரசனிடத்து நிலவிய பயம் அதிகரித்தமை.
(2) ஸ்தூபத்தைக் காக்கும் பொறுப்பை 'நாத்' பூதங்களிடம் ஒப்படைத்தமை
(3) எல்லாச் சமயங்களையும் சமமாகக் கருதுதலை நிரூபித்தல்.
(4) ஸ்தூப நிர்மாணம் குறித்த 'நாத்' பக்தர்களுள் நிலவும் எதிர்ப்பினை அகற்றுதல்
(5) 'நாத்' வழிபாட்டினை முற்றாகப் புறுக்கணிக்காது அதற்குச் சமமாகப் புத்தசமயத்தைப் பரப்புதல்.

**41.** கி.மு 1871 இல் பர்மாவின் மண்டலே நகரில் இடம்பெற்ற ஐந்தாவது பௌத்த மகாசபையில் முக்கிய செயலாகக் கருதத்தக்கது.
(1) திரிபிடகத்தை நூல் வடிவாக்கியமை
(2) திரிபிடகத்தை வாய் வழியாகத் தொடர்வதற்கு பாணக மரபினை உண்டாக்கியமை
(3) சாசனத்திலிருந்து துர்நடத்தையுள்ள பிக்குகளை வெளியேற்றியமை
(4) திரிபிடகத்தை மாபிள் தட்டுகளில் செதுக்கி அவற்றை லோகமாரஜின தாதுகோபத்தை சுற்றிப் பதிப்பித்தமை.
(5) திரிபிடக நூலைப் பாதுகாப்பதற்காக அதனை அயல் நாடுகளுக்கு அனுப்பிவைத்தமை.

**42.** இலங்கைக்கும் தாய்லாந்துக்குமிடையே கடந்த காலத்திலிருந்து நிலவிவரும் கலாசாரத் தொடர்புகள் இரு நாடுகளிலுமே புத்த சமயத்தை வளர்ப்பதற்குக் காரணமானதுடன், விஷேஷமாக இலங்கையின் புத்தசமய உயர்வுக்கு அதன்மூலம் கிடைத்த உதவி பெரியது. இதன்படி இரண்டு நாடுகளிடையேயும் நிலவிய கலாசாரத் தொடர்பினை நிரூபிக்கும் நிகழ்வொன்றாக இனங் காணத்தக்கது,
(1) ஷ்யாமோபாலி நிகாயாவை ஸ்தாபித்தமை
(2) அமரபுர நிகாயாவை ஸ்தாபித்தமை
(3) ராமக்ஞ நிகாயாவை ஸ்தாபித்தமை
(4) இரு நாட்டு பாளிதிரிபிடகத்தை ஒப்பீடு செய்தமை.
(5) ஆபத்துக் காலங்களில் இலங்கைப் பிக்குகளின் பாதுகாப்பைக் கவனித்தமை

**43.** கி.மு 6ஆம் நூற்றாண்டில் கொரியா தூதுக் குழுவொன்று யப்பானுக்கு புத்தசமயத்தை அறிமுகம் செய்ததனைத் தொடர்ந்து மரபுவழிவந்த 'ஷின்தோ' பக்தர்கள் புத்தசமயம் பரவுவதற்கு எதிராக புத்தசமயத்தை பின்பற்றியவர்களுடன் போரிட்டு அதனைக் காக்கும் நடவடிக்கையிலிறங்கியவர்,
(1) கிம்மி சக்கரவர்த்தி
(2) ஷோதொகுதயிஷி
(3) ஸோக வம்சத்தினர்
(4) மொனொனொபே வம்சத்தினர்
(5) நகதொமி வம்சத்தினர்

**44.** யப்பானின் பிரசித்தமான பௌத்த விழாக்களுள் 'ஹனமத்சுறி' என்பது இவ்வாறு இனங்காணப்படும்,
(1) இறந்த உயிர்களை வணங்குதல்
(2) தேநீர் பருகும் விழா
(3) சாக்கிய முனி புத்தரின் பரிநிர்வாண விழா
(4) சாக்கிய முனி புத்தரின் ஞானோதயத்தை நினைவுகூரும் விழா
(5) சாக்கிய முனி புத்தரின் பிறந்தநாள் விழா

**45.** சீன பிக்குகளினதும் பிக்குணிகளினதும் கடுமையான அர்ப்பணிப்பினாலும் சக்கரவர்த்திகளினது தன்னலமற்ற ஆதரவினாலும் சீனாவில் புத்தசமய அபிவிருத்தியும் பரவலும் இடம்பெற்றது. இது சம்பந்தமாக ஹங் மற்றும் டாங் சாம்ராச்சிய காலங்களில் சீன பிக்குகளது தலைமையில் நிகழ்த்தப்பட்ட இலக்கிய ரீதியான செயற்பாடுகள் சீனாவில் புத்தசமய பரம்பலுக்கும் நீண்டகால நிலைபேற்றுக்கும் பெரிதும் உதவின. அத்தகைய விஷேடமான இலக்கிய செயற்பாடாவது,
(1) யுவான் எனும் பெயருடைய பௌத்த போதனை முறை பரவியமை
(2) மகாயான பௌத்த நூல்களுக்கான உரைகளைத் தொகுத்தமை
(3) இந்தியாவிலிருந்து புத்த விநய நூல்களைக் கொண்டுவந்தமை
(4) சீன மொழிக்கு முப்பத்தையாயிரம் பௌத்த சொற்களைச் சேர்த்துக் கொண்டமை
(5) பௌத்த கற்கைக்காக விகாரைகளில் கல்வி நிலையங்களை ஸ்தாபித்தமை

[பக் 9 ஐப் பார்க்க

**46.** புத்தர் சிலையை அமைக்கும்போது புத்தரின் கையையும் கைவிரல்களையும் பயன்படுத்தி அமைக்கப்டும் கைத்தொடர்பாடல் சங்கேதம், 'முத்திரை' என்று சொல்லப்படும். இந்தியாவிலும் இலங்கையிலும் புத்தரது சிலைகளில் இத்தகைய ஆறு முத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் அபய முத்திரையுடன் கூடிய புத்தசிலையாகக் இனங்காணத்தக்கது,
(1) மஹமெல்னவின் சமாதி சிலையாகும்.
(2) அவுகன சிலையாகும்.
(3) பொலன்னறுவ கல் விஹாரையிலுள்ள சிலையாகும்.
(4) பெனாறிஸிலுள்ள ஸாரநாத் புத்தர் சிலையாகும்
(5) பதுளை மாகாணத்தில் கிடைத்து தற்போது கொழும்பு நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ள சிலையாகும்.

**47.** அனுராதபுர தூபராம தாதுகோபத்தைச் சுற்றி சைத்தியாகாரமொன்று கட்டப்பட்டிருந்தது என தொல்பொருளியலாளரின் ஆதாரங்கள் நிருபிக்கின்றன. இந்த சைத்தியாகாரவை கட்டியவர்,
(1) தேவநம்பியதிஸ்ஸ மன்னன்
(2) முதலாம் முகல மன்னன்
(3) தாதுசேன மன்னன்
(4) துட்டகெமுனு மன்னன்
(5) வசப மன்னன்

**48.** காந்தார மரபிற்குரிய புத்த சிலைகளின் விஷேட லட்சணமாக இனங்காணப்படத்தக்கது,
(1) அரைக்கண் மூடியிருத்தல்
(2) கன்னங்கள் பொங்கியிருத்தல்
(3) கூந்தல் சுருண்டிருத்தல்
(4) கண்கள் திறந்திருத்தல்
(5) உடம்பிலிருந்து கைகள் சற்று விலகியிருத்தல்

**49.** அஜந்தா மரபின்படி நிர்மாணிக்கப்பட்டதாகக் கருதப்படும் சிகிரியா ஓவியங்கள் ஒரு இலங்கைக் கலைப்டைப்பாகும். சிகிரியாவில் அழகான பெண் ஓவியங்கள் ஐந்நூறு அளவில் புராதன காலத்தில் இருந்தன என்பது ஸீகிரி குருட்டு பாடல்கள் மூலம் தெளிவாகின்றன. இருப்பினும் தற்போது எஞ்சியிருப்பது சில ஓவியங்களே. பொன்வண்ணமானதும், நீலவண்ணமானதுமான இந்தப் பெண் ஓவியங்கள் பற்றிய பலவிதமான கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. இந்த விமர்சன கருத்துகளுக்கிடையே எச்.சி.பி.பெல்ஸ் என்பவரின் கருத்தின்படி சிகிரிய ஓவியங்கள் குறிப்பது,
(1) அப்சரஸ்களை
(2) காசியப்ப மன்னனின் ராணிகளும் அவர்களின் பரிவாரப் பெண்களும் மலர்கள் எடுத்துக்கொண்டு பிதுரங்கல விகாரைக்கு வழிபாட்டுக்குச் செல்வதனை
(3) மின்னலையும் மேகத்தினையும்
(4) காசியப்ப மன்னின் மறைவினால் சோகத்தில் ஆழ்ந்திருக்கும் அரசிகளை
(5) குவேரனின் ஆலகமன்தாவினை

**50.** சிங்கள இலக்கியம் முக்கியமாக புத்தசமயமத்தினாலேயே வளர்ந்தது எனப் புராதன இலங்கைசார் இலக்கியப் படைப்புக்களைப் பரிசீலிக்குமிடத்துத் தெளிவாகின்றது. புராதன இலங்கைப் படைப்பாளிகள் புத்தரின் பண்புகளையும் பலவித பௌத்த கருத்துக்களையும் கருப்பொருளாகக் கொண்டு இலக்கியங்களைப் படைத்தனர். தம்பதெனிய காலத்தில் வண. தர்மசேனாவினால் ஆக்கப்பட்ட சத்தர்மரத்னாவலி இத்தகையதொரு தனித்துவமான இலக்கியப் படைப்பாகும்.இதன்படி சத்தர்மரத்னாவலியை ஆக்குவதற்குக் கருவாக அமைந்தது.
(1) புத்தரின் அரஹம் பண்பாகும்
(2) புத்தரின் புரிஸதம்ம ஸாரமீ பண்பாகும்
(3) புத்தரின் ஸம்மா ஸம்புத்த பண்பாகும்
(4) போதிசத்வரின் பாரமிதா பண்பினை வர்ணிக்கும் ஜாதகட்ட கதையாகும்
(5) தம்மபத காதாவை விபரிக்கும் தம்மபதட்ட கதையாகும்

* * *

0161

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

බෞද්ධ ශිෂ්ටාචාරය II
பௌத்த நாகரிகம் II
Buddhist Civilization II

45 T II

07.08.2018 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி **I** இல் **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இல் **மூன்று** வினாக்களையும் தெரிசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் **20** புள்ளிகள் வீதம் உரித்தாகும்.

## பகுதி I

**1.** (i) நான்கு வர்ணாச்சிரமங்களையும் அறிமுகப்படுத்துக.

(ii) பிராமண வர்ணத்தின் தோற்றம் பற்றிய புத்தசமயத்தினரின் எண்ணப்பாங்கினைத் தெளிவுபடுத்துக.

(iii) புத்தர்கால இந்திய சமூகம் நகரமயமாக்கலுக்குரியதாக இருந்ததென்பதற்கு **நான்கு** காரணிகளை எடுத்துக் காட்டுக.

(iv) அஜிதகேஸகம்பலவின் தஸவஸ்துவின் தவறான பார்வைகளை அறிமுகப்படுத்துக.

(v) புத்தருக்கும் வஜ்ஜி மாநிலத்திற்குமிருந்த தொடர்பினை நிரூபிக்கும் **நான்கு** காரணிகளை எடுத்துக் காட்டுக.

**2.** (i) ஈஸ்வர நிர்மாண வாதத்தின் மூலம் தனிப்பட்ட தலைமைத்துவம் மட்டுப்படுத்தப்படும் வகையினை சுருக்கமாக விபரிக்குக.

(ii) புத்தசமயத்தினால் பெண்கள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்ட **மூன்று** சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டுக.

(iii) “பரித்யாகய” என்பதனை பௌத்த அரசியல் போதனைக்கு அமைவாக பகுப்பாய்வு செய்க.

(iv) சிகாலோவாத சூத்திரத்தின்படி நண்பர்கள், நண்பர்களுக்கிடையில் இருக்க வேண்டிய கடமை, பொறுப்பு என்பவற்றைப் பெயரிடுக.

(v) காமம், பொய் முதலான (காமமித்யாசார) பழக்கவழக்கங்களிலிருந்து விலகியிருத்தலின் முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமாக குறிப்பிடுக.

**3.** (i) பத்து குசலங்களைப் பெயரிடுக.

(ii) ‘அத்துபனாயிக தர்மபரியாய’ பற்றி விவரணம் ஒன்று எழுதுக.

(iii) “அத்திசுகம்” என்பது யாது என விளக்குக.

(iv) ‘ஸமஜிவிகதா’ என்பதனை மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிக்குக.

(v) புத்தரின் தாமரை (பத்மாகார) வாழ்க்கையின் மூலம் தற்கால சமூகம் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரியினைச் சுருக்கமாக எடுத்துக்கூறுக.

[ பக் 2 ஐப் பார்க்க

## பகுதி II

4. (i) “அதிக பேராசை சமூகத்தில் பிரச்சினைகள் ஏற்படுவதற்குக் காரணமாகின்றது.” பௌத்த போதனையின் அடிப்படையில் ஆராய்க.
   (ii) ‘ஸவவிஜநந்ததா’ தனிநபர் மற்றும் சமூக அபிவிருத்திக்கு உதவுமாற்றை பௌத்த போதனையின் அடிப்படையில் எடுத்துக் காட்டுக.
   (iii) அறவழியிலான செல்வசம்பாத்தியத்துக்கான வழியாக விவசாயத்தையும் கால்நடை வளர்ப்பினையும் புத்தசமயம் முன்னிலைப்படுத்தும் வகையினைத் தெளிவுபடுத்துக.
   (iv) செல்வத்தை அனுபவித்தல் பற்றிய பௌத்த எண்ணப் பாங்கு சமூக சகவாழ்வுக்கு உதவும் வகையினை “போக சுக”மூலமாக எடுத்துக் காட்டுக.

5. (i) புத்தரிடத்திலிருந்த ‘ஞான விஷேஷம்’ பற்றி அறிமுகம் செய்க.
   (ii) மத போதனையாளராக புத்தர் வெற்றியடைந்ததற்கான காரணங்களை விமர்சிக்குக.
   (iii) புத்தர் கால இந்தியாவில் நிலவிய பேரரசுகளைப் பெயரிட்டு அவற்றின் நிர்வாக கட்டமைப்பையும் எடுத்துக் காட்டுக.
   (iv) உபசம்பதா முறையினைப் பெயரிடுவதுடன் ‘ஞத்திசத்துத்தகம்மா’ உபசம்பதாவை பற்றி அறிமுகம் செய்க.

6. (i) புத்தர்காலத்து இந்தியாவில் புத்தசமயம் விரைவில் பரவியமைக்கு காரணங்களைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுக.
   (ii) மூன்றாம் பௌத்த மகாசபை சாசன பரவலாக்கத்துக்கும், அதன் நீண்டகால நிலைபேற்றுக்கும் பங்களிப்புச் செய்த வகையினை விளக்குக.
   (iii) அசோகரின் தர்மவடிவமைப்பின்போது அதில் புத்தசமயம் எவ்வளவு தூரம் செல்வாக்குச் செலுத்தியது என்பதை பரிசீலிக்குக.
   (iv) புராதன இந்திய பௌத்த பல்கலைக்கழகங்களில் இடம்பெற்ற சமயம், தத்துவம் சார்ந்த மற்றும் கல்விசார் சேவைகளை மதிப்பிடுக.

7. (i) இந்தியப் பின்புலத்துடனான சமயங்கள் மகிந்தனின் வருகைக்கு முன்னர் இலங்கையில் பரவியிருந்தமை பற்றி மூலாதாரங்களின் உதவியுடன் எடுத்துக் காட்டுக.
   (ii) மகிந்ததேரரின் சமய தூதுவச் சேவையின் வெற்றிக்கு உதவிய காரணங்களைப் பரிசீலிக்குக.
   (iii) இலங்கைச் சமூகத்தினரிடையே பௌத்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு அபயகிரி மரபு ஆற்றிய சேவையினை மதிப்பிடுக.
   (iv) பர்மா (மியன்மார்)வுக்கும் இலங்கைக்குமான கலாசாரத் தொடர்புகள் இரு நாடுகளிலும் புத்தசமயம் செழிப்புற உதவிய வகையினைப் பரிசீலிக்குக.

8. (i) புத்தசிலைகளை அமைப்பதில் பயன்படுத்தப்பட்ட வேறுபட்ட முத்திரைகளை உதாரணங்களுடன் இனங்காட்டுக.
   (ii) இந்திய சாஞ்சி ஸ்தூபத்துடன் ஒப்பிடுகையில் இலங்கை ஸ்தூபங்களில் காணப்படும் அமைப்பு ரீதியான வேறுபாடுகளை எடுத்துக் காட்டுக.
   (iii) சந்திரவட்டக்கல் இலங்கைசார் பௌத்த கலைத்துவத்தின் தனித்துவத்தை வலியுறுத்தும் படைப்பு என்ற வகையில் அதனை விமர்சனத்துக்குட்படுத்துக.
   (iv) சிங்கள இலக்கியப் போஷணைக்கு புத்த சமயத்தின் மூலம் கிடைத்த ஆதரவினை **இரண்டு** இலக்கிய ஆக்கங்களை உதவியாகக் கொண்டு விளக்குக.

* * *